# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

அரசினர் மேல்நிலைப் பள்ளி இராயபுரம்

# காலாண்டுத் தேர்வு மாதிரி வினாத்தாள்
## ஒன்பதாம் வகுப்பு
## சமூக அறிவியல்

**நேரம்; 2.30 மணி** **மதிப்பெண்; 100**

**பகுதி I {மதிப்பெண் 14}**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையை எழுதவும்.** 14 x 1 = 14

1. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ----------- ஆவர்.
   அ} ஹோமோ ஹெபிலிஸ் ஆ} ஹோமோ எரக்டஸ் இ} ஹோமோ சேப்பியன்ஸ் ஈ} நியாண்டர்தாஸ்
2. கூற்று; தமிழகத்தின் ஆறுகள் குளங்கள் அருகே இடை கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
   காரணம்; நீர்பாசன மேலான்மை இடைக் கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது.
   அ} கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
   ஆ} கூற்றும் காரணமும் சரி ஆனால் கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை.
   இ} கூற்று சரி காரனம் தவறு
   ஈ} கூற்றும் காரணமும் தவறானவை
3. ஹரப்பா மக்கள் ------------ பற்றி அறிந்திருக்கவில்லை
   அ} தங்கம் மற்றும் யானை ஆ} குதிரை மற்றும் இரும்பு
   இ} ஆடு மற்றும் வெள்ளி ஈ} எருது மற்றும் பிளாட்டினம்
4. சேரர்களைப் பற்றி குறிப்பிடும் கல்வெட்டு எது?
   அ} புகளூர் ஆ} கீர்நார் இ} புலிமான்கோம்பை ஈ} மதுரை
5. கிரேக்கர்களின் மற்றொரு பெயர் -------------- ஆகும்
   அ} ஹெலணிஸ்டுகள் ஆ} ஹெலணியர்கள் இ} பீணிசியர்கள் ஈ} ஸ்பார்ட்டான்கள்
6. கூற்று I; புவித்தட்டுக்கள் ஒன்றோடொன்று மோதுவதால் மலைத்தொடர்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.
   கூற்று II; கவசத்தின் வெப்பத்தின் காரணமாக புவித்தட்டுக்கள் நகருகின்றன.
   அ} கூற்று I தவறு II சரி ஆ} கூற்று I மற்றும் II தவறு
   இ} கூற்ரு I சரி II தவறு ஈ} கூற்று I மற்றும் II சரி
7. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்தியா --------- கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
   அ} கோண்டுவானா ஆ} லொரேசியா இ} பாந்தலாசா ஈ} பாஞ்சியா
8. கீழ்க்கண்டவற்றுள் எது இரண்டாம் நிலை நிலத்தோற்றம்
   அ} ஆசியா ஆ} தக்கானபீடபூமி இ} குலு பள்ளத்தாக்கு ஈ} மெரினா கடற்கரை
9. ஆற்றின் இளநிலைப் போக்கினால் உருவாகும் ரிலத்தோற்றம் எது?
   அ} வண்டல் விசிரிகள் ஆ} வெள்ளச்சமவெளிகள் இ} டெல்ட்டாக்கள் ஈ} v வடிவ பள்ளத்தாக்குகள்
10. வளிமண்டலத்தில் -------------- அடுக்குகள் உள்ளன.
    அ} நான்கு ஆ} ஐந்து இ} மூன்று ஈ} ஏழு
11. குடவோலை முறையை பின்பற்றியவர்கள்
    அ} சேரர்கள் ஆ} பாண்டியர்கள் இ} சோழர்கள் ஈ} களப்பிரர்கள்
12. தேர்தல் ஆணையம் மற்றும் தேர்தல் நடைமுறைகளைப் பற்றி குறிப்பிடும் இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு.
    அ} இந்திய அரசியலமிப்பு பகுதி xv 324 முதல் 329 வரை
    ஆ} இந்திய அரசியலமிப்பு பகுதி xv 324 முதல் 328 வரை
    இ} இந்திய அரசியலமிப்பு பகுதி xv 324 முதல் 325 வரை
    ஈ} இந்திய அரசியலமிப்பு பகுதி xv 324 முதல் 330 வரை
13. மனித வளம் எனும் சொல் குறிப்பிடுவது
    அ} ஏழை மக்கள் மீதான முதலீடு ஆ} வேளாண்மை மீதான செலவு
    இ} சொத்துக்கள் மீதான முதலீடு ஈ} ஒட்டு மொத்த மக்களின் திறமை
14. மூன்றாம் துறையில் அடங்குவது
    அ} போக்குவரத்து ஆ} காப்பீடு இ} வங்கிகள் ஈ} அனைத்தும்

**பகுதி II {மதிப்பெண் 20}**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** 10 x 2 = 20

15. வரலாற்றுக்கு முந்தைய கால தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.
16. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் விவரி.
17. தொல்லியல் ஆய்வுக்களங்கள் கடந்த கால வரலாற்றுச் சான்றுகளை அளிக்கின்றன உன் கருத்துக்களை முன்வைக்கவும்.
18. கலிங்கா கல்வெட்டு குறிப்பு கூறுவது என்ன?

**க.சத்யானந்தம் B.Assist**

அரசினர் மேல்நிலைப் பள்ளி இராயபுரம்

19. புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
20. புவி அதிர்ச்சி என்றால் என்ன? அவை எவ்வாறு உருவாகின்றன?
21.. இந்தியாவில் காணப்படும் ஏதேனும் நான்கு சுண்ணாம்புப்பாறை பிரதேசங்களை பட்டியலிடுக.
22. மழைப்பொழிவின் வகைகள் யாவை?
28. புவி வெப்பமயமாவதை தடுக்க நாம் எத்தகைய வழிமுறைகளை கையாள வேண்டும்?

## பகுதி III (மதிப்பெண் 50)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி** 10 x 5 = 50

**42வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

(i) சௌ அரசின் தலைமை ஆவண காப்பாளர் --------------- ஆவார்
(ii) காவிரி ஆறு --------------ல் வங்காலவிரிகுடாவில் கலக்கிறது.
(iii) வருடம் முழுவதும் நிலையாக ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுக்கு ------------- என்று பெயர்
(iv) இந்தியா -------------- மக்களாட்சி முறையினை கொண்டுள்ள நாடாகும்.
(v) பொருளாதார நடவடிக்கைகள் ------------ மற்றும் --------- துறைகளாக வகைபடுத்தப்பட்டுள்ளன

**30. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| (i) அரிக்கமேடு | -- | பூமியின் மிகப் பழமையான எழுத்துக் காவியம் |
| (ii) பாப்பிரஸ் | -- | சங்ககால துறைமுகம் |
| (iii) பாகுபலி | -- | சட்டங்களும், புராணக் கதைகளும் அடங்கிய புனித இலக்கியம் |
| (iv) ஜெண்ட் அவஸ்தா | -- | ஒருவகைப் புல் |
| (v) கில்காமெஷ் | -- | மிக உயரமான சமணச்சிலை |

**31. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| (i) கிளையாறு | -- | ஆஸ்திரேலியா |
| (ii) கூட்டு எரிமலை | -- | கீற்று மேகம் |
| (iii) எஸ்கர் | -- | பசிபிக் பெருங்கடல் |
| (iv) பெண் குதிரை வால் | -- | ஆற்றின் மூப்பு நிலை |
| (v) வில்லி வில்லி | -- | பனியாற்றின் செயல்பாடு |

**32.அ) வேறுபடுத்துக.**

(i) இயற்பியல் சிதைவு மற்றும் இரசாயனச்சிதைவு
(ii) நிலக்காற்று மற்றும் தரைக்காற்று

**ஆ) காரணம் கூறுக.** புவி மேலோடு கவசத்தின் மீது மிதக்கின்றது. ஏன்?

33. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையது தெளிவுபடுத்துக.
34. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்கள் பற்றி எழுதுக.
35. புவி அமைப்பை விவரி.
36. வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.
37. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
38. இந்தியாவில் அழுத்தக் குழுக்களின் செயல்பாடுகள் யாவை?
39. இந்தியாவின் சுற்றுச்சூழல் கொள்கைகளைப் பற்றி விளக்கமாக விவரிக்கவும்.
40. பொதுத்துறையையும் தனியார் துறையையும் வேறுபடுத்துக.
41. 2000 முதல் 2019ஆம் ஆண்டுவரையிலான காலக்கோடு வரைந்து உன் பிறந்த ஆண்டு முதல் தொடங்கி ஏதேனும் ஐந்து நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

**42. கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்**

எகிப்து, சிந்து, கோபி பாலைவனம், சீன நாகரீகம், பாரசீக வளைகுடா

## பகுதி IV (மதிப்பெண் 16)

**43. இரு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 x 8 = 16

**அ) ஹோமினிட் மற்றும் ஹோமினின்ஸ்**

அ) ஹோமினிட் என்போர் யாவர்?
ஆ) ஆப்பிரிக்காவில் கருவிகளை செய்த முதல் மனித இனம் எது?
இ) நவீனகால மனிதர்கள் எந்த பெயரால் குறிக்கப்படுகிறார்கள்?
ஈ) இந்த இனத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு வகையைக் கூறு.

**ஆ) எகிப்திய நாகரீகத்தின் பண்புகள்**

அரசினர் மேல்நிலைப் பள்ளி இராயபுரம்

அ) எகிப்து நைல் நதியின் நன்கொடை என்று அழைக்கப்படுவது ஏன்?

ஆ) பாரோ மற்றும் விசிரியர்கள் என்போர் யார்?

இ) பிரமிடுகள் என்றால் என்ன? அதை ஏன் கட்டினார்கள்

ஈ) மம்மி உருவாக்க முறையைக் கூறு.

**(அல்லது)**

**43.இ) நடு கற்கள்**

அ) மேய்ச்சல் சமூகங்களுக்கிடையே காணப்பட்ட பொதுவான நடைமுறை என்ன?

ஆ) பகைவர்களின் கால்நடைச் செல்வத்தை கவர்ந்து சென்றவர்கள் யாவர்?

இ) இறந்த வீரர்களை மக்கள் எவ்வாறு நினைவு கூர்ந்தனர்?

ஈ) நடுகற்களை நடுவதற்கான வழிமுறைகளை விளக்கும் தமிழ் நூல் எது?

**ஈ) கௌதம புத்தர்**

அ) புத்தரின் இயற்பெயர் என்ன?

ஆ) புத்தர் பிறந்த ஊர் என்ன?

இ) அவருக்கு எங்கே ஞானோதயம் ஏற்பட்டது?

ஈ) புத்தர் முதல் போதனையை எங்கே நிகழ்த்தினார்?

**44. கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.**

(i) பசிபிக் நெருப்பு வளையம் (ii) புவி அதிர்ச்சி மண்டலம் ஏதேனு இரண்டு

(iii) இரண்டு செயல்படும் எரிமலைகள் (iv) கிழக்கு ஆப்பிரிக்காவின் பிளவு பள்ளத்தாக்கு

(v) இமயமலைத்தொடர் (vi) ஆல்ஃப் மலைத்தொடர்

**(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.**

(i) இரண்டு டெல்டாக்கள் (ii) நியுயார்க்கில் உள்ள சுண்ணாம்பு பிரதேசம்

(iii) இரண்டு வெப்ப பாலைவனம் (iv) இரண்டு குளிர் பாலைவனம்

(v) இந்தியப் பெருங்கடல்